நினைவூட்டு –1

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 2826 /ஆ1 /2022, நாள் : 29.12.2022

பொருள்: பள்ளிக் கல்வித் துறை – வேலூர் மாவட்டம் – போதை விழிப்புணர்வு மன்றம் – அனைத்து அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதி உயர் நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட அறிவுறுத்தல் – சார்பாக.

*பார்வை:*
1. சென்னை– 6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.048176/எம்/இ1/2022. நாள்: 09.08.2022 மற்றும் 02.12.2022,
2. அரசுக் கடிதம் எண்.13185/SE5(1)/2022/5 நாள்.24.11.2022.
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள் : 07.12.2022

#######

பார்வை 1–ல் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அனைத்து அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதி உயர் நிலை / மேல்நிலைப் பள்ளிகளிலும் 11.08.2022 முற்பகல் அன்று 10.30 விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

மேலும், அதனைத் தொடர்ந்து பார்வை 2–ல் காணும் அரசுக் கடிதத்தின்படி மேற்கூறிய அனைத்து வகைப் பள்ளிகளிலும் போதை விழிப்புணர்வு மன்றம் செயல்பட அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்து வகைப் பள்ளிகளிலும் போதை ~~பொருள்~~ விழிப்புணர்வு மன்றம் செயல்படுத்தப்பட்ட விவரம் கீழ்குறிப்பிட்ட பள்ளிகளின் பெயர்களுக்கெதிரே ஆம் / இல்லை என்ற விவரத்தினை உடனே பூர்த்தி செய்யுமாறு அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுவரை மன்றம் துவக்காத பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் உடனடியாக மன்றம் துவக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு–படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

அனைத்து அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதி –
உயர் நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –
1. மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை), வேலூர். (தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும்)
2. ~~மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி), வேலூர். (தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும்)~~
3. மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள்), வேலூர். (தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும்)

//ப.த.//